12.02.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தென்னை வளர்ச்சி வாரியம் அமைக்க கோரிக்கை

வத்தலகுண்டு அருகே ஜி.தும்மலப்பட்டியில் தென்னை சார்ந்த தொழில் அதிகம் நடைபெற்று வருவதால் இங்கு தென்னை வளர்ச்சி வாரியம் அமைக்க வேண்டும் என என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜி.தும்மலப்பட்டியைச் சேர்ந்த 60 சதவீத பெண்கள் தென்னை சார்ந்த தொழில் செய்து வருகின்றனர். தென்னம்பாலைகளை ஊற வைத்து அவற்றை கிழித்து கொடுக்கின்றனர். இந்த வேலையை, இப்பகுதி பெண்கள் அவரவர் வீட்டிலேயே சொந்தமாகவும், குழுக்களாகவும் சேர்ந்து செய்கின்றனர். இவர்களுக்கு இதில் கணிசமான வருமானம் கிடைக்கிறது. கிழித்த தென்னம் பாலைகள் இங்கிருந்து திண்டுக்கல், மதுரை, தஞ்சாவூர், திருத்துறைபூண்டி, நாகப்பட்டிணம், திருவாரூர், மன்னார்குடி உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதுகுறித்து ஜி.தும்மலப்பட்டி ஊராட்சித் தலைவர் உதயக்குமார் கூறும் போது, பெரும்பாலும் இங்கு தென்னை சார்ந்த தொழிலில் அதிகமான பெண்கள் ஈடுபடுகின்றனர். தென்னை மரத் தோகையில் கிடுகு பின்னுவதுடன், துடைப்பமும் தயாரிக்கப்படுகிறது. எனவே இப்பகுதியில் தென்னை வளர்ச்சி வாரியம் அமைத்து இப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றார்.

### உழைக்கும் விவசாயிகளுக்கு மானிய நிதி: ஒடிஸா முதல்வர் உத்தரவு

நில உரிமையாளர்களுக்குப் பதிலாக உண்மையாக உழுது வரும் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள் மானியத்தை வழங்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஒடிஸா முதல்வர் நவீன் பட்நாயக்

உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2015இல் ஏற்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் மானிய உதவி குறித்த ஆய்வுக் கூட்டம் புவனேசுவரத்தில் நவீன் பட்நாயக் தலைமையில் வியாழக்கிழமை நடந்தது. இக்கூட்டத்தில் அவர் மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை வேளாண் இடுபொருள் மானியமாக ரூ.50 கோடி விநியோகிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நில உரிமையாளர்களுக்குத்தான் மானிய நிதி கிடைக்கிறது. நில ஆவணங்கள் இல்லாததால், நிலத்தை உண்மையில் உழுதுகொண்டிருக்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு மானியம் மறுக்கப்படுவதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர். இயற்கைப் பேரிடர் ஏற்படும் நிலையில், மானிய நிதி உண்மையில் நிலத்தை உழும் விவசாயிகளுக்கு கிடைக்கும் வகையில் சிறப்புச் சட்டத்தை மாநில அரசு கொண்டு வரவிருக்கிறது என்று மாநில வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சர் விஜய்ஸ்ரீ ரௌத்ராய் தெரிவித்துள்ளார். விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்க்க பிஜு ஜனதாதள அரசு தவறிவிட்ட காரணத்தால் குறிப்பாக மேற்கு ஒடிஸாப் பகுதியில் உழவர்கள் பலர் தற்கொலை செய்துகொண்டிருப்பதாக பாஜக புகார் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## அரசு நிலத்தில் வளர்ந்த தேக்கு மரங்கள் கூடுதல் விலைக்கு ஏலம்

போளூரை அடுத்த சந்தவாசல் ஊராட்சியில் அரசு நிலத்தில் வளர்ந்த தேக்கு மரங்கள் கூடுதல் விலைக்கு ஏலம் போனது.

போளூரை அடுத்த சந்தவாசல் ஊராட்சியில் அரசுக்குச் சொந்தமான இடத்தில் கடந்த 60 ஆண்டுகளுக்கு முன் தேக்கு மரக்கன்றுகள் நடப்பட்டு, ஊராட்சி சார்பில் வளர்க்கப்பட்டது. இதில் 59 தேக்கு மரக்கன்றுகள் நன்றாக வளர்ந்து மரமாகிவிட்டது. இந்த மரத்தை அரசு சாரபில் ரூ.42 லட்சத்துக்கு ஏலம் விட அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில், ஏலம் விடும் நிகழ்ச்சி போளூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது. இதில், பண்ருட்டி, கோழிக்கோடு, வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு

பகுதிகளைச் சேர்ந்த 73 ஏலதாரர்கள் கலந்துகொண்டு ஏலம் கேட்டனர். அப்போது, அரசு நிர்ணயித்த விலையைவிட கூடுதலாக ரூ.8 லட்சத்துடன் ரூ.50 லட்சத்து ஒரு ஆயிரத்துக்கு தேக்கு மரங்கள் ஏலம் போனது.

நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் நாகேஷ்குமார், ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயகாந்தி வெங்கடேசன், ஊராட்சிச் செயலர் பரமசிவன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## தஞ்சாவூரில் விவசாய சுற்றுலா திட்டத்துக்கு நல்ல வாய்ப்பு

தஞ்சாவூரில் விவசாயம் மற்றும் கிராமிய சுற்றுலா திட்டத்துக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன என தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கத்தில் குறிப்பிடப்பட்டது.

பல்கலைக்கழக மேலாண்மை துறை சார்பில் "கிராமிய மற்றும் விவசாய சுற்றுலா மூலம் தொழில்முனைவோருக்கான வாய்ப்புகள்' என்ற தலைப்பிலான கருத்தரங்கத்தில் புணே வேளாண் வணிக நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பாண்டுரங்க தவாரே பேசியது:

இந்தியாவிலேயே முதன்முதலாக, மகாராஷ்டிர மாநிலம், பாராமதி என்ற இடத்தில் கடந்த 2005 ஆம் ஆண்டில் விவசாய சுற்றுலா திட்டம் தொடங்கப்பட்டு,வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. தற்போது, மகாராஷ்டிரா மாநில வேளாண் சுற்றுலா 4 லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளைக் கவர்கிறது. இதன் மூலம் விவசாயிகள், சிறு வணிகர்கள், கைவினைக் கலைஞர்கள் பலரும் பயனடைந்துள்ளனர். கிராமங்களில் உள்ள பண்ணை விடுதிகளில் தங்குவது, மீன் பிடிப்பது, மாட்டு வண்டி, டிராக்டர் பயணம் மற்றும் பாரம்பரிய கிராமப்புற உணவுகளை உட்கொள்வது, நாட்டுப்புற நடனம்,இசை ஆகியவற்றை ரசிப்பது இதன் ஒரு பகுதி என்றார் பாண்டுரங்க தவாரே.

இண்டிகோ ஓட்டல் குழுமத் தலைவரும், முதன்மை இயக்குநருமான ஸ்டீவ் போர்ஜியா பேசியது: தஞ்சை மாவட்ட கிராமங்களில் பல்வேறு சிறப்பு அம்சங்கள் உள்ளன. இவை அனைத்தையும் பலப்படுத்தி விவசாயச் சுற்றுலா மூலம் கிராமப்புற இளைஞர்கள், வணிகர்கள் உள்ளிட்டோர் பெருமளவில் பயனடையலாம் என்றார் அவர்.

பல்கலைக்கழக மேலாண்மைத் துறை முதன்மையர் வி. பத்ரிநாத் பேசியது: தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயம் மற்றும் கிராமிய சுற்றுலா வாய்ப்புகள் குறித்து கடந்த 6 மாதங்களாக கள ஆய்வு மேற்கொண்டு வருகிறோம். இத்திட்டத்துக்குத் தேவையான விவசாயம், கால்நடை, மீன், காய், கனி பண்ணைகள் ஆகியவை குறித்த ஆய்வறிக்கையை மத்திய,மாநில அரசுகளுக்கு அளிக்கவுள்ளோம். மேலும்,சாஸ்த்ரா பல்கலைகழக ஆய்வு மையம் மூலம் இத்திட்டத்தைச் செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் பத்ரிநாத். தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுத் துறைத் தலைவர் ராஜகோபால், தமிழ்நாடு சுற்றுலா வழிகாட்டி சங்கத் தலைவர் எஸ். முத்துக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## விளாத்திகுளம் வட்டாரத்தில் பருத்திமகசூல் அதிகரிப்பு; விலை வீழ்ச்சி

விளாத்திகுளம் வட்டாரத்தில் பருத்தி விளைச்சல் அதிகரித்தாலும், விலை வீழ்ச்சி அடைந்திருப்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கோவில்பட்டி, எட்டயபுரம், விளாத்திகுளம், நாகலாபுரம், புதூர், ஓட்டப்பிடாரம் உள்ளிட்ட பகுதிகளில் நிகழாண்டில் பெரும்பாலான விவசாயிகள் பருத்தி சாகுபடியை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த அக்டோபரில் ஒரு கிலோ பருத்தி விதையை ரூ. 950-க்கு வாங்கி நடவு செய்து, உழவு, உரம், களை எடுத்தல், மருந்து தெளித்தல் என ஒரு ஏக்கர் பருத்தி சாகுபடிக்காக ரூ. 20 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை விவசாயிகள் செலவு செய்துள்ளனர். நீண்ட இழை பருத்தி மற்றும் வீரிய இழை பருத்தி ரகங்கள் பயிரிடப்பட்டிருந்தன.

தற்போது பருத்தி காய்கள் வெடிக்க தொடங்கியிருப்பதால் அறுவடை தீவிரமடைந்துள்ளது.

இந்நிலையில், கடந்த சீசனை விட குவிண்டாலுக்கு ரூ.2,000 வரை விலை சரிந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

ஒரு குவிண்டால் பருத்தி கடந்த ஆண்டு ரூ. 5,800க்கு விற்கப்பட்டது. தற்போது வியாபாரிகளால் ரூ. 3,400முதல் ரூ. 4100வரை மட்டுமே

கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் செலவு செய்த தொகை கூட கிடைக்காமல் விவசாயிகள் ஏமாற்றத்தில் தவிக்கின்றனர்.

பருத்தி கொள்முதலில் இடைத்தரகர்கள் தலையீடு, பதுக்கல் போன்ற காரணங்களினால் விவசாயிகளுக்கு முதலீட்டு தொகை கூட கிடைக்காத நிலை இருப்பதாகவும், இனிவரும் காலங்களில் பருத்தி சாகுபடி பரப்பு குறையும் எனவும் விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

நேரடி கொள்முதல் மையங்கள் தேவை: இதுகுறித்து அயன்வடமலாபுரம் அ. வரதராஜன் கூறியது:

பருத்தி செடியில் ஏற்பட்ட வேர்ப்புழு தாக்கத்தால் அதிகளவில் பருத்தி காய்கள் செடியிலிருந்து உதிர்ந்தன. ஒரு பருத்தி செடியில் சராசரியாக 150 காய்கள் பிடிக்க வேண்டும். ஆனால் 100 காய்கள் வீதமே காய் பிடிப்பு இருந்தது. எனினும், ஏக்கருக்கு 10 குவிண்டால் வரை மகசூல் கிடைக்கிறது. விளாத்திகுளம் வட்டாரத்தில் தற்போது பருத்தி அறுவடைப் பணிகள் பரவலாக தொடங்கியுள்ளன. நான்கு மாதத்திற்கு சீசன் இருக்கும். ஆனால் சந்தையில் கொள்முதல் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் பருத்தி கொள்முதல் மையங்களை மத்திய அரசின் "காட்டன் கார்பரேஷன் ஆப் இந்தியா' திறந்துள்ளது.

அந்த மாநில விவசாயிகளிடமிருந்து கொள்முதல் மையங்கள் நேரடியாக பருத்தியை கொள்முதல் செய்வதால் குவிண்டால் பருத்திக்கு ரூ. 5,000-க்கு மேல் விலை கிடைக்கிறது. தமிழகத்தில் அதுபோன்ற கொள்முதல் மையங்களை திறக்காததால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ûûஎனவே, தமிழகத்திலும் மத்திய அரசு பருத்தி கொள்முதல் மையங்களை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நிகழாண்டிற்கு பருத்தி கொள்முதல் விலையை ஒரு குவிண்டாலுக்கு ரூ.6,000 என மத்திய, மாநில அரசுகள் அறிவிக்க வேண்டும் என்றார் அவர்.

## ஏரிகளில் மீன் வளர்க்க குத்தகை

மாவட்டத்தில் மீன் வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளில், 3 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் மீன் வளர்ப்பதற்காக ஏலம் விடப்படுகிறது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் எம்.லட்சுமி வெளியிட்ட செய்தி அறிக்கை: விழுப்புரம் மாவட்டம், மீன்வளத் துறை உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள, தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் விற்பனைத் திட்ட அ பிரிவு ஏரிகள் 20ம், ஆ பிரிவு ஏரிகள் 114 ஏரிகளை, மூன்றாண்டு குத்தகை அடிப்படையில் (01.07.2015 முதல் 30.06.2018 வரை) விடுவதற்கு, ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் பிப்.10ஆம் தேதி முதல் பிப்.19ஆம் தேதி வரை வழங்கப்படும்.

மூடி முத்திரையிடப்பட்ட ஏல ஒப்பந்தப் புள்ளிகள் பிப்.23 மற்றும் பிப்.24 தினங்களில் விழுப்புரம் வழுதரெட்டி நித்தியானந்தா நகர், மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வரவேற்கப்படுகிறது.

ஏலம் குறித்த நிபந்தனைகள்: ஏரிகளின் பெயர், அரசின் குறைந்தபட்ச குத்தகைத் தொகை மற்றும் இதர விவரங்களை மீன்துறை உதவி இயக்குநர், விழுப்புரம் அலுவலகத்தில் அலுவலக வேலை நாள்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அலுவலக தொலைபேசி எண்: 04146 - 259329.)

## இயற்கை முறை விவசாயம்: பிரான்ஸ் நாட்டு மாணவர்களுக்குப் பயிற்சி

புதுச்சேரியில் இயற்கை முறை விவசாயம் குறித்து குருமாம்பேட் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தில் பிரான்ஸ் நாட்டு மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வேளாண் கல்லூரி மாணவர்கள் கடந்த 8 ஆண்டுகளாக புதுச்சேரிக்கு களப்பயிற்சிக்காக வருகின்றனர். அதேபோல், இந்த ஆண்டு இந்திய வேளாண்மை குறித்த பயிற்சியினை பெறுவதற்காக 28 மாணவர்கள் புதுச்சேரி வந்துள்ளனர். குருமாம்பேட்டில் இயங்கும் மத்திய அரசின் காமராஜர் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தில் இந்திய விவசாயம் குறித்து கலந்துரையாடல், செயல்விளக்கப் பயிற்சி, கிராமங்களில் தங்கி களப்பணிகளில் ஈடுபடுதல் போன்றவற்றை ஒருமாத காலத்துக்கு அவர்கள் மேற்கொள்கின்றனர் என்று அறிவியல் நிலைய முதல்வர் குமார் தெரிவித்துள்ளார்.

மேலும், இயற்கை முறையிலான விவசாயத்தின் மீது பிரான்ஸ் நாட்டு மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டுவதாக உதவிப் பேராசிரியர் பார்த்தசாரதி கூறினார்.

**தமிழகம், புதுவையில் மழைக்கு வாய்ப்பு**

தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் வெள்ளிக்கிழமை மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதுகுறித்து, வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது: வியாழக்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில், கன்னியாகுமரி மாவட்டம், லோயர் கோதையாறில் 50 மி.மீ., பேச்சிப்பாறையில் 30 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மற்ற மாவட்டங்களில் மழை பதிவாகவில்லை. தென் கிழக்கு வங்கக்கடல், நிலநடுக்கோட்டை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதியில், குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவானது. இது, வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் தெற்கு அந்தமான் கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது. அடுத்த 48 மணி நேரத்தில் தீவிர காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக மாறும் வாய்ப்புள்ளது. இதன் காரணமாக, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் உள்ளிட்ட தென் கடலோர மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் மழை பெய்யும் வாய்ப்புண்டு. மேலும் தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 2 நாள்களுக்கு மழை பெய்யும். தென் கடலோர மாவட்டங்கள் தவிர்த்து, மற்ற இடங்களில் வறண்ட வானிலையே காணப்படும். சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் இருக்கும். நகரின் ஒரு சில பகுதிகளில், அதிகாலை நேரங்களில் மூடுபனி காணப்படும். வெப்பநிலை அதிகபட்சமாக 90 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும் என, வானிலை ஆய்வு மைய அதிகாரி தெரிவித்தார்.

இன்றைய வேளாண் செய்திகள்

## வெட்டிவேரு வாசம்... விசிறிக்குள்ளே வீசும்!



வாசம் தருவதோடு வருமானமும் தேடித் தருகிறது வெட்டிவேர் என்கிறார், மதுரை பெருங்குடியைச் சேர்ந்த இயற்கை விவசாயி முத்துக்குமார். ஆறு ஏக்கரில் வெட்டிவேர் சாகுபடி செய்யும் தன் அனுபவங்களை முத்துக்குமார் கூறியது: ஐந்தாண்டுகளுக்கு முன் நண்பர் பாண்டியனிடம் மூலிகை சாகுபடிக்காக ஓராண்டு களப்பணி செய்தேன். முதல் முயற்சியாக ஐந்து சென்ட் நிலத்தில் துளசி செடி பயிரிட்டேன். அதன்பின் வெட்டிவேர் பயிரிட ஆரம்பித்தேன். இது பத்து மாத பயிர். ஒரு நாற்று நட்டால் 100 புற்கள் கிடைக்கும். நாற்று நட்டபின் 3 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் விட வேண்டும். இரண்டு மாதத்திற்கு ஈரப்பதம் இருக்க வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை புற்களை வெட்டிவிட வேண்டும். இதைக் கொண்டு கூரை வேயலாம். செடிகளுக்கு மூடாக்காக பயன்படுத்தலாம். நான்கு முதல் ஐந்து அடி உயரம் வரை வளரும் என்பதால் வேலியோரம் வைத்தால்

ஆடு, மாடு, யானைகள் வராது. 10 மாதங்கள் கழித்து மரம் அறுக்கும் இயந்திரத்தை கொண்டு மேற்பகுதி புற்களை வெட்டி விடுவேன். புல்டோசர் மூலம் வேர்ப் பகுதிகளை தோண்டி எடுக்க வேண்டும். இயந்திரத்தை பயன்படுத்துவதால் ஆட்கூலி செலவும் குறைவு. சிறு அளவு வேரை தண்டுடன் விட்டு வைத்தால் நாற்றாக வளரும். இதிலிருந்து 100 புற்கள் உருவாகும். களிமண் தரையில் வளர்த்தால் வேரை கழுவுவது பெரிய வேலையாகி விடும். மற்ற மண்ணில் நன்கு வளரும். வேர் காய்ந்த பின் உதறினால் மண் உதிர்ந்து விடும். இவற்றை இரண்டாண்டுகள் பாதுகாக்கலாம். ஒரு குடம் தண்ணீரில் ஐந்து வேரை இட்டு 8 மணி நேரம் ஊறவைத்தால் தண்ணீர் வாசனையாக இருக்கும். வெட்டிவேர் விசிறி மூச்சுக்காற்றை சுத்தமாக்கும். தலையணை தூக்கத்திற்கு உதவுகிறது. விசிறி, தலையணையை தயாரிக்கிறோம். திருப்பத்தூரில் உள்ள 2 ஏக்கர் தென்னைக்கு நடுவே ஊடு பயிராகவும், 3 ஏக்கரில் நேரடியாகவும் பயிரிட்டுள்ளேன். களை எடுக்க வேண்டியதில்லை. நட்டு வைத்தால் போதும். கீழே ஈரம்; மேலே வெயிலுடன் நல்ல மண்ணாக இருந்தால் ஏக்கருக்கு ரூ. ஒருலட்சம் செலவு செய்தால் ரூ.3 லட்சம் கிடைக்கும், என்றார். இவரிடம் பேச 94867 04380.

-எம்.எம்.ஜெயலெட்சுமி, மதுரை.

**வெண்மை புரட்சிக்கு வித்திடும் தென்னம்பால், தேங்காய்ப்பால்...**



தென்னம்பாலும், தேங்காய்ப்பாலும் தாய்ப்பாலுக்கு நிகரான சத்தான பானங்கள். இதை தினமும் சாப்பிட்டு வந்தால் உடலுக்கு ஊட்டச்சத்துகள் தடையின்றி கிடைக்கும்.தென்னம்பாளையில் இருந்து வருவது தான் தென்னம்பால். மண் கலயத்திற்கு பதிலாக இரண்டடுக்கு

பாத்திரத்தை பாளையின் அருகில் வைத்து காற்றுப்புகாத பாலிதீன் பையில் தென்னம்பாலை பிடிக்கலாம். பாத்திரத்தின் உட்புறத்தில் பாதியளவிற்கு மற்றொரு பாலிதீன் பையில் ஐஸ்கட்டிகள் நிரப்ப வேண்டும். காலையில் பாத்திரம் வைத்தால் மாலை வரை ஐஸ் பைக்குள் நொதிக்காமல் தென்னம்பால் கிடைக்கும். இதை வெளியே எடுத்து 5 டிகிரிக்கு கீழ் இருக்குமாறு பாதுகாத்தால் ஆறுமாதங்கள் வரை கெடாது. சுவையான பானமாக உடனடியாக பருகலாம். இதில் ஒரு சதவீதம் கூட ஆல்கஹால் இல்லையென்றாலும் கள் இறக்கும் முறையில் தான் இறக்க வேண்டும் என்பதால் அரசு அனுமதி கிடைக்கவில்லை. நீரா எனப்படும் தென்னம்பால் நொதிப்பதை தடுக்கக்கூடிய கரைசலை, தென்னை வளர்ச்சி வாரியத்தின் தொழில்நுட்ப நிலையம் தயாரித்துள்ளது. இதை பயன்படுத்தி நீரா நொதிக்காமல் அறை வெப்பநிலையில் மூன்று வாரங்கள் வரை இயற்கை மணத்துடன் வைத்திருக்கலாம்.கேரளாவில் தென்னை விவசாயிகள் ஒன்றிணைந்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை அமைத்து நீராவை தயாரிக்கின்றனர். பாலக்காட்டில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் நிறுவனம் தயாராகி வருகிறது. தென்னை வளர்ச்சி வாரியமும் நீராவை ஊக்கப்படுத்துகிறது. தற்போது திருப்பூர் கலெக்டர் மூலம் நீரா இறக்குவதற்கு முதலமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளோம். அனுமதி கிடைத்தால் தமிழகத்திலும் தென்னை விவசாயிகளை ஒருங்கிணைத்து, உழவர் உற்பத்தியாளர் மன்றங்களை உருவாக்கலாம். விவசாயிகளுக்கும் லாபம் கிடைக்கும். தென்னம்பால் மட்டுமல்ல தேங்காய்ப்பால், தேங்காய் எண்ணெய் மூன்றுமே மிகச்சிறந்த உணவு. அதில் கலப்படம் செய்யாமல் இருக்கக்கூடாது.-**வேலாயுதம்,**

மாநில தலைவர், தமிழ்நாடு விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கம், திருப்பூர் .

94437 48966

## மாம்பூவே... நீ பூப்பாயோ

கடந்தாண்டின் மழையளவு, கவாத்து செய்தல், தண்டின் வளர்ச்சி, இலைகளின் பயிர் வினையியல் மாறுபாடு, வளர்ச்சி ஊக்கி அளவு, தட்பவெப்ப நிலையைப் பொறுத்து டிச., முதல் பிப்., வரை மா மரங்கள் பூக்கும் நிலை மாறும். இந்தாண்டு கூடுதலாக மழை பெய்துள்ளதால் மாவிலைகளில் அதிக ஈரப்பதம் இருப்பதால் பூக்கும் காலம் தள்ளிப் போகலாம். இதற்கு பொட்டாசியம் நைட்ரேட் ரசாயன உப்பை மாமரங்களில் தெளிக்கலாம். ஒரு கிலோ பொட்டாசியம் நைட்ரேட், அரைகிலோ யூரியா எடுத்து 50 லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும். அதனுடன் 50 லிட்டர் தண்ணீர், 100 மில்லி ஒட்டும் திரவத்தை சேர்க்கவேண்டும். அதிக உப்புத்தன்மையுள்ள நீரை பயன்படுத்தக்கூடாது. இலை, தளிர், மொட்டுக்கள் நன்கு நனையுமாறு மாலை வேளையில் 15 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். 5 வாரங்கள் கழித்து பூக்க ஆரம்பிக்கும். **-பாலகிருஷ்ணன்,** விதைஅறிவியல் துறைத்தலைவர், விவசாயக் கல்லூரி, மதுரை.

## தேயிலை தூள் நேரடி ஏற்றுமதி தனியார் தொழிற்சாலைகளுக்கு வாய்ப்பு

கோத்தகிரி: தனியார் தேயிலை தொழிற்சாலைகள், நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள், குன்னூர், கொச்சின் மற்றும் கோவையில் உள்ள ஏல மையங்கள் மூலம், விற்பனை செய்யப்படுகிறது. விற்பனைக்கு வரும் தேயிலை தூளை, வியாபாரிகள் 'சிண்டிகேட்' அமைத்து, குறைந்த விலைக்கு வாங்குவதாக குற்றச்சாட்டு உள்ளது.

பிரச்னைக்கு தீர்வு காண, சென்னையை தலைமையிடமாக கொண்ட, 'இந்தோ-ஆஸ்திரேலியா சேம்பர் ஆப் காமர்ஸ்' அமைப்பு, தேயிலை

துாளை நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது.
முதற்கட்டமாக, நீலகிரி மாவட்டத்தில் உள்ள, தனியார் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது; குழுவில், தேயிலை துாளை நேரடியாக ஏற்றுமதி செய்ய விரும்பும் தொழிற்சாலை உரிமையாளர் இணையலாம்.
இதுதொடர்பாக, ஏப்., 8ம் தேதி முதல், 17ம் தேதி வரை, ஆஸ்திரேலியாவில் நடக்கும் தேயிலை கண்காட்சியில், நீலகிரி பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். அமைப்பின் இயக்குனர் சரத் சந்திரன், நீலகிரி ஒருங்கிணைப்பாளர் சீராளன் ஆகியோர், இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## நத்தத்தில் விதை நீக்கிய புளி கிலோ ரூ.60

நத்தம்;நத்தம் மார்க்கெட்டில் விதை நீக்கிய புளி கிலோ ரூ.60 க்கு விற்பனையாகிறது. தற்போது சீசன் துவங்கியிருப்பதால் வரத்தை பொறுத்து விலை குறைய வாய்ப்புள்ளது என, வியாபாரிகள் தெரிவித்தனர். தமிழகத்தில் கிருஷ்ணகிரி, திண்டுக்கல் புளிமார்க்கெட்டிற்கு அடுத்து நத்தம் பெரிய மார்க்கெட்டாக உள்ளது. இங்கு திருப்பத்துார், கொட்டாம்பட்டி, சிங்கம்புணரி, மூங்கில்பட்டி, வெள்ளாளப்பட்டி, சிறுகுடி, மணக்காட்டூர், உலுப்பகுடி பகுதிகளில் இருந்து அதிக அளவில் புளி விற்பனைக்கு வருகிறது.

இங்கிருந்து விதைப்புளியை வாங்கும் வேம்பார்பட்டி, செங்குறிச்சி பகுதி வியாபாரிகள், விதையை நீக்கி சருகு புளியை பிரித்து எடுத்து "பேக்கிங்' செய்கின்றனர். அவற்றை சென்னை, மதுரை, திருச்சி, பாலக்காடு, பொள்ளாச்சி பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர்.
வியாபாரி தியாகராஜன் கூறியதாவது: புளி சீசன் ஆரம்ப நிலையில்தான் உள்ளது. தற்போது வரத்து குறைவாகவே உள்ளதால் உடனே விலை

குறைய வாய்ப்பில்லை. வரத்து அதிகரிக்க துவங்கியவுடன் விலை குறையும்' என்றார்.

## விவசாய பணிகளுக்கு பணியாளர்கள் தேவை

கரூர்: 'கடவூர் ஒன்றியத்தில், 100 நாள் பணியாளர்களை விவசாயத்திற்கு பயன்படுத்த வேண்டும்' என, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் தங்கவேல் கூறினார். அவர் வெளியிட்ட அறிக்கை: கடவூர் ஒன்றியத்தில், தற்போது விவசாய பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. போதிய ஆள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அனைத்து பெண்களும், 100 நாள் வேலைக்கு செல்வதால் விவசாய பணிகள் முடங்குகின்றன. 100 நாள் பணியாளர்களை அதிகாரிகள் வேலைக்கு வரவில்லை என்றால் அட்டையை ஒப்படைக்க வேண்டும் என மிரட்டுகின்றனர். இதனால் பயந்து போய் விவசாய பணிகளுக்கு செல்லாமல், 100 நாள் வேலைக்கே அதிகம் செல்கின்றனர். எனவே, அந்த பணியாளர்களை நிறுத்தி வைத்தால் விவசாய பணிகளுக்கு ஆட்கள் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## கொள்ளு அறுவடை துவங்கியதால் விலை சரிவு

சேலம்: தமிழகத்தில் கொள்ளு அறுவடை துவங்கி உள்ளதாலும், வடமாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வரும் கொள்ளின் வரத்து அதிகரித்துள்ளதாலும், அதன் விலை நேற்று, கிலோவுக்கு, நான்கு ரூபாய் சரிவு ஏற்பட்டது.

தமிழகத்தில், விருதுநகர், திருச்சி, நெய்வேலி, தூத்துக்குடி, நெல்லை, மதுரை ஆகிய இடங்களில், கொள்ளு (கானம்) பயிரிடப்படுகிறது. இந்த பகுதிகளில் தற்போது அறுவடை தீவிரமடைந்துள்ளதால், மார்க்கெட்டுக்களுக்கு விற்பனைக்கு வரும் கொள்ளின் வரத்து அதிகரித்துள்ளது. இந்நிலையில், ராஜஸ்தான், மத்தியபிரதேசம், மஹாராஷ்டிரா உள்ளிட்ட வடமாநிலங்களில் இருந்தும், ஆந்திரா,

கர்நாடகா உள்ளிட்ட தென் மாநிலங்களில் இருந்தும், தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் கொள்ளு வரத்து எதிர்பார்த்ததை விட அதிகரித்துள்ளது. தமிழகத்தின் பெரிய மார்க்கெட்டுக்கான சென்னை, சேலம், விருதுநகர் ஆகிய இடங்களில், நேற்று குவிண்டாலுக்கு, 400 ரூபாய் சரிவு ஏற்பட்டது. வரத்து அதிகரித்து வருவதால், விலை மேலும் சரிவு ஏற்படும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

### வடமாநில வரத்து சரிவு: துவரம், உளுந்தம் பருப்பு விலை கிடுகிடு

சேலம்: வடமாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படும், துவரம், உளுந்தம்பருப்பு வரத்து சரிந்துள்ளது. மொத்த வியாபாரிகளின் சிண்டிகேட்டால், குவிண்டாலுக்கு, 500 ரூபாய் விலை உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் கடந்த ஆண்டு துவரை, உளுந்து விளைச்சல் பாதிப்பு ஏற்பட்டதாலும், வடமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் துவரை, துவரம் பருப்பின் வரத்தில் சரிவு ஏற்பட்டதாலும், விலை புதிய உச்சத்தை தொட்டது. கடந்த நவம்பர் மாதம் கிலோ, 210 ரூபாய்க்கு விற்ற துவரம் பருப்பு, படிப்படியாக விலை குறைந்து, டிசம்பர் மாதத்தில் குவிண்டாலுக்கு, 4,000 ரூபாய் வரை சரிவு ஏற்பட்டது. ஜனவரி மாதத்தில், மேலும், 1,000 ரூபாய் குறைந்தது. இதே போல், உளுந்தின் வரத்தும் அதிகரித்ததால், நவம்பர் மாதம் உச்சத்தில் இருந்த அதன் விலை, படிப்படியாக சரிவு ஏற்பட்டு வந்தது. இந்த சரிவு மேலும் அதிகரிக்கும் என, எதிர்பார்த்த நிலையில், வடமாநில வரத்து சரிவை காரணம் காட்டி, மொத்த வியாபாரிகள் தங்களுக்குள் சிண்டிகேட் அமைத்து. பதுக்கலில் ஈடுபட்டனர். இதனால், துவரம், உளுந்தம் பருப்பு விலை குவிண்டாலுக்கு, 500 ரூபாய் வரையிலும், சில்லரை விலை, கிலோவுக்கு, ஐந்து ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

## அரசு உப்பு டன் ரூ.1,160

சாயல்குடி: வாலிநோக்கத்தில் அயோடின் கலந்த ஒரு டன் அரசு உப்பு ரூ.1,160க்கு விற்பனை செய்யப்படுவதாக உதவி செயற்பொறியாளர் விஜயன் கூறினார். அவர் மேலும் கூறுகையில்,""வாலிநோக்கத்தில் தமிழ்நாடு அரசு உப்பு நிறுவனம் இயங்குகிறது. இதில், அயோடின் கலந்த ஒரு டன் உப்பு ரூ.1,160 க்கும், லோ சோடியம் உப்பு ஒரு கிலோ ரூ.17க்கும், டபுள் அயோடின் கலந்த ஒரு கிலோ உப்பு ரூ.10க்கும், அம்மா உப்பு ரூ.7 க்கும், ரேஷனில் ரூ. 3க்கும் வழங்கப் படுகிறது,'' என்றார்.

## மும்பை மார்க்கெட்டில் விலை குறைவு: தமிழக தேங்காய்கள் அனுப்புவது தற்காலிக நிறுத்தம்

ப.வேலூர்: மும்பை மார்க்கெட்டில் விலை குறைவாக கேட்பதால், தமிழகத்திலிருந்து மும்பைக்கு அனுப்பும் தேங்காய்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

நாமக்கல் மாவட்டம், ப.வேலூர், கபிலர்மலை, பரமத்தி, பாண்டமங்கலம், கொளக்காட்டுப்புதூர், ஜேடர்பாளையம், குப்புச்சிபாளையம், பொத்தனூர், சோளசிராமணி போன்ற பகுதிகளில், 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் தென்னை சாகுபடி நடக்கிறது. இங்குள்ள, 20க்கும் மேற்பட்ட தனியார் தேங்காய் மண்டிகள் மூலம், மஹாராஷ்டிரா, குஜராத், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கும், தமிழகத்தில் சேலம், கரூர், திருச்சி, கோவை, மதுரை, ஈரோடு உள்ளிட்ட பகுதிகளுக்கும், தேங்காய்கள் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. கடந்த, 15 நாட்களுக்கு முன், ஒரு தேங்காய், 6 ரூபாயாக இருந்தது. தற்போது, 3 ரூபாய்க்கு விற்பனையாகிறது. விளைச்சல் அதிகரிப்பால், தேங்காய் விலை சரிந்துள்ள நிலையில், வெட்டுக் கூலி மற்றும் சுமை கூலிக்கு கட்டுப்படியாகாமல், 40 நாட்களுக்கு தேங்காய் வெட்டு என்ற

காலக்கெடுவை மாற்றி, 80 நாட்களுக்கு ஒருமுறை தேங்காய் வெட்டும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். கடந்த ஆண்டு, 9 ரூபாய்க்கு விற்ற தேங்காய், தற்போது, 3 ரூபாயாக குறைந்து விட்டது.

இது குறித்து நாமக்கல், ஈரோடு, கரூர் மாவட்ட தேங்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜெகநாதன் கூறியதாவது: மழை காரணமாக தேங்காய் விளைச்சல் அதிகரிகத்துள்ளது. இதனால் தேங்காய் விலை சரிவை எட்டியுள்ளது. மும்பை மார்க்கெட்டில் ஒரு தேங்காயை, 3 ரூபாய்க்கு கேட்பதால் நாமக்கல், ஈரோடு, கரூர் மாவட்ட தேங்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்தினர் கடந்த, 10ம் தேதி முதல் மும்பைக்கு தேங்காய்களை விற்பனைக்கு அனுப்பாமல் நிறுத்தி வைத்துள்ளனர். மத்திய அரசு வெளிநாட்டில் இருந்து தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்வதை தடை செய்ய வேண்டும். நெல் கொள்முதல் செய்யப்படுவதுபோல, தேங்காயை அரசே கொள்முதல் செய்ய வேண்டும். ஒரு தேங்காயின் விலை, தற்போது, 3 முதல் 4 வரை தான் விலை போகிறது. மழை காரணமாக தேங்காய் வரத்து அதிகமிருந்தாலும், கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநிலங்களில் அதிகளவில் தேங்காய் வரத்துள்ளதால், அவர்களும் வடமாநிலங்களுக்கு குறைந்த விலையில் அனுப்புகின்றனர். இதனால், தேங்காய் விற்பனை குறைந்து தேக்கம் அடைகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

**பண்ணை கழிவு மேலாண் பயிற்சி**

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண்துறை சார்பில், பண்ணைக்கழிவு மேலாண்மை பயிற்சி முகாம் நடந்தது. நாமகிரிப்பேட்டை ஒன்றியம், நாவல்பட்டி கிராமத்தில் பண்ணைக்கழிவு மேலாண்மை குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. நாமகிரிப்பேட்டை வேளாண்மை உதவி இயக்குனர் ராஜேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் பூமாலை ஆகியோர் பயிற்சியை தொடங்கி

வைத்தனர். அனைத்திந்திய மகளிர் சேவா டிரஸ்ட் இயக்குநர் விஜயன் பண்ணைக்கழிவு மேலாண்மையின் முக்கியத்தும் பற்றி பேசினார். தொடர்ந்து, பண்ணைக்கழிவிலிருந்து எவ்வாறு மூலப்பொருட்கள் தயாரிக்கலாம் என்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் காட்டூர், நாவல்பட்டி மற்றும் சுற்று வட்டாரப்பகுதியைச் சேர்ந்த, 40 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## சொட்டுநீர் பாசன முறையில் தர்பூசணி பயிரிட விவசாயிகள் ஆர்வம்

ரிஷிவந்தியம், : ரிஷிவந்தியம் அருகே யால் கிராமத்தில் சொட்டுநீர் பாசன முறையில் விவசாயம் செய்யும் பணி தீவிரமாக நடந்து வருகிது. ரிஷிவந்தியம் ஒன்றியத்திற்குட்பட்ட யால் கீழ்பாடி, பெரிய பகண்டை உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் வழக்கமாக கரும்பு, நெல், கம்பு ஆகியவற்றை விவசாயிகள் பயிர் செய்து வந்தனர். கடந்த ஒரு வருடமாக தண்ணீர் பற்றாக்குறையாலும், பருவம் தவறிய மழையினாலும் விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்டு வந்தது.

விவசாயிகள் பலர் விளைநிலத்தை விற்றுவிட்டு ஆந்திரா, கேரளா கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு கூலி வேலைக்கு சென்று விட்டனர்.இந்நிலையில் இப்பகுதியில் உள்ள விவசாயிகள் சொட்டு நீர் பாசன முறையில் கத்தரி, வெண்டைகாய், தர்பூசணி, வெள்ளரி ஆகிய பயிர்களை விவசாயம் செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இம்முறையை பயன்படுத்துவதால் தண்ணீர் அதிகமாக தேவைபடுவதில்லை என்றும், ஆட்கள் பற்றாக்குறையை

சமாளிப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

## பாம்பாறு அணையில் இருந்து தண்ணீர் திறப்பு 4000 ஏக்கர் பாசன வசதி பெறும்

கிருஷ்ணகிரி, : ஊத்தங்கரை அருகே பாம்பாறு அணையில் இருந்து 4000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் வகையில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

ஊத்தங்கரை அருகே பாம்பாறு அணையில் இருந்து பாசனத்திற்காக நேற்று மாவட்ட வருவாய் அலுவலர் கிருஷ்டி திறந்து வைத்தார். அப்போது அவர் கூறியதாவது: பாம்பாறு அணையில் இருந்து இன்று முதல் 5 நாட்களுக்கு தண்ணீர் திறந்தும், 5 நாட்களுக்கு தண்ணீர் நிறுத்தியும் சுழற்சி முறையில் மொத்தம் 6 நனைப்புகளுக்கு 85 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். இதன் மூலம் பாவக்கல், ஓபக்காவலசை, நல்லவன்பட்டி, எட்டிப்பட்டி, நடுப்பட்டி, குப்பநத்தம், தாம்பல், வேடகட்டமடுவு, புளியம்பட்டி, மிட்டப்பள்ளி, மூன்றாம்பட்டி, போத்தராஜன்பட்டி, கொட்டுகக்காரன்பட்டி, கரியபெருமாள்வலசை மற்றும் மேல்செங்கம்பாடி என 15 கிராமங்களில் உள்ள 4 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். எனவே, விவசாயிகள், பொதுப்பணித்துறையினருடன் ஒத்துழைத்து நீரினை சிக்கனமாக பயன்படுத்தி, அதிக விளைச்சல் பெறவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அறிவிக்கப்பட்ட தேதிக்கு பிறகு எக்காரணத்தை கொண்டும் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படாது. இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி ஆர்டிஓ முகமது அஸ்லம், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் செல்வராஜ், உதவி செயற்பொறியாளர் சரவணகுமார், உதவி பொறியாளர் செல்வகுமாரி, தாசில்தார் ராஜசேகரன், மாநில நிலவள வங்கி தலைவர் சாகுல்அமீது, ஒன்றிய குழு தலைவர் கிருஷ்ணன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் கண்ணன், திருஞானம் மற்றும் விவசாய பாசன ஆயக்கட்டு தலைவர்கள் கலந்து கொண்டனர்.

**சேலம் லீ பஜாருக்கு புதுமஞ்சள் வரத்து துவங்கியது 30 சதவீதம் விளைச்சல் சரிவு**

சேலம், : சேலம் சுற்று வட்டார மாவட்டங்களில் இருந்து, லீ பஜாருக்கு புது மஞ்சள் வரத்து துவங்கியுள்ளது. தமிழகத்தில் 33 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகின்றன. இதன் மூலம் ஆண்டுக்கு 160 லட்சம் டன் மஞ்சள் விளைச்சல் கிடைக்கின்றன. கடந்தாண்டு ஜூன், ஜூலையில் பெய்ய வேண்டிய தென்மேற்கு பருவமழை சரியாக பெய்யவில்லை. அதே நேரக்கில் அக்டோபர், நவம்பரில் வட கிழக்கு பருவமழை எதிர்பார்த்ததை விட அதிகளவில் மழை பொழிந்தது. இதனால் நடப்பாண்டு மஞ்சள் விளைச்சல் குறைந்துள்ளது. இந்நிலையில் சாகுபடி செய்யப்பட்டிருந்த மஞ்சள் அறுவடை கடந்த சில நாட்களாக நடந்து வருகிறது. இதன் காரணமாக சேலம் லீ பஜாருக்கு புது மஞ்சள் வரத்து தொடங்கியுள்ளது. இது குறித்து சேலம் லீ பஜார் மஞ்சள் வியாபாரி பாபு கூறியதாவது: சேலம் லீ பஜார் மஞ்சள் மார்க்கெட்டுக்கு ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 50 ஆயிரம் மஞ்சள் மூட்டைகள் விற்பனைக்கு வரும். கடந்த 2013-14ம் ஆண்டு வழக்கத்தைவிட 75 ஆயிரம் மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. ஆனால் 2014-15ம் ஆண்டில் சரியான நேரத்தில் பருவமழை பெய்ததாலும், மாறி பொழிந்தாலும் மஞ்சள் விளைச்சல் குறைந்தது. 2015ம் ஆண்டில் ஒரு ஏக்கருக்கு 2 ஆயிரம் முதல் 2 ஆயிரத்து 300 கிலோ மஞ்சள் விளைச்சல் தந்தது. நடப்பாண்டு ஆயிரம் 300 முதல் ஆயிரத்து 500 கிலோ தான் விளைச்சல் தந்துள்ளது. இதனால் 30 சதவீதம் மஞ்சள் விளைச்சல் குறைந்துள்ளது. இந்நிலையில் சாகுபடி செய்யப்பட்டிருந்த மஞ்சள் அறுவடை துவங்கியுள்ளதால், கடந்த சில நாட்களாக சேலம் லீ பஜாருக்கு புது மஞ்சள் வரத்து தொடங்கியுள்ளது. நேற்று நடந்த மஞ்சள் ஏலத்திற்கு 5 ஆயிரம் கிலோ விற்பனைக்கு வந்தது. அடுத்து வரும் வாரங்களில் வரத்து மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகரிக்கும். நேற்று நிலவரப்படி உருண்டை மஞ்சள் ரூ.9500 முதல் ரூ.10500 எனவும், விரலி மஞ்சள் ரூ.10500 முதல் ரூ.11500 என ஏலம் போனது. இவ்வாறு பாபு கூறினார்.

## சீசன் துவங்கும் முன் பெரம்பலூரில் குவிந்துள்ள தர்பூசணி

பெரம்பலார், : பனிப்பொமிவு குறையாக நிலையில், குளிர்ச்சிக்குப் பெயர்போன தர்பூசணிப் பழங்கள் சீசனுக்கு முன்பாகவே பெரம்பலூரில் விற்பனைக்காக குவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல்,மே, ஜூன் மாதங்களில் காணப்படும் மிகக்கடுமையான வெப்பத்தைத் தாங்குவதற்கும், சூட்டைத்தணிக்கவும் விரும்புகிற பொதுமக்கள் இளநீர், வெள்ளரிப் பிஞ்சு, நொங்கு, மோர், கம்மங்கூழ், குளிர்பானங்களைப் பெரிதும் விரும்பி சாப்பிடுவர். இதற்கு இணையாக தாகத்தைத் தீர்க்கவல்ல ஒன்றுதான் தர்பூசணிப் பழங்கள். ரசாயன குளிர்பானங்களால் உடலுக்கு தீங்குதான் ஏற்படுகிறது எனப் பொதுமக்கள் உணர்ந்துவரும் சூழலில், அவற்றின் விற்பனையும் வெகுவாகக் குறைந்துதான் வருகிறது. இந்நிலையில், இயற்கையாக மக்கள் பெரிதும் விரும்பக்கூடிய தர்பூசணிக்கான வரவேற்பு தொடர்ந்து அதிகரித்தே வருவது குறிப்பிடத்தக்கது. பெரம்பலாருக்கு ஒவ்வொரு வருடமும் திண்டிவனத்திலிருந்து தர்பூசணிப் பழங்கள் கொண்டு வந்து விற்பனை செய்யப்படுவது வழக்கம். நடப்பாண்டு விழுப்புரம் மாவட்டம் திருக்கோயி லூர் பகுதியிலிருந்து தர்பூசணிப்பழங்கள் கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்ளது. இதற்கான முக்கியசீசனாக ஏப்ரல், மே, ஜூன் மாதங்கள் அணிவகுத்து காத்திருக்கையில், சீசனுக்கு ஒன்றரை மாதங்களுக்கு முன்பாகவே, விற்பனைக்காக தர்பூசணிப் பழங்கள் பெரம்பலூரில் குவிக்கப்பட்டுள்ளன. கிலோ ரூ.10, 12க்கும் விற்கப்படும் இந்தப்பழங்கள் ஒவ்வொன்றும் 3 அல்லது 4கிலோ எடையை கொண்டிருப்பதால், ரூ.30முதல் ரூ.45வரைக்கும் விலைவைத்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதிலும் பழங்களைத் துண்டுத்துண்டாக வெட்டி, மிளகுத்தூள் போட்டு, தனித்தனிக் கீற்றுகளாக ரூ.10க்கும் விற்கப்படுகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் அதிகாலை, அந்திமாலை, இரவுநேரங்களில் பனிப்பொழிவு குறையாமல் குளிர்வாட்டிவரும் சூழலில், வெப்பத்தை குறைப்பதற்கான புதுவரவாக தர்பூ சணிப்பழங்கள் அழையா விருந்தாளியாக இப்போதே வந்துவிட்டது ஆச்சர்யத்தை ஏற் படுத்தியுள்ளது. இருந்தாலும் அதனை வரவேற்கவும் பொதுமக்கள் தயாராகி வருகின்றனர்.

## இரும்பு சத்து உரமிட 50% மானியம்

பட்டுக்கோட்டை, : கரும்பு பயிரில் இரும்பு சத்துக்கான நுண்சத்து உரமிடுவதற்கும், நிலப்போர்வை அமைத்திடவும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 50 சத அரசு மானியம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதுகுறித்து திருவோணம் வேளாண்மை உதவி இயக்குநர் மகியரசன் தெரிவித்துள்ளதாவது: கரும்பு பயிர் சிற்சில இடங்களில் வெளிறிய பச்சை நிறத்துடன் பயிர் வளர்ச்சி குன்றி காணப்படும். இது இரும்பு சத்து பற்றாக்குறையின் அறிகுறியாகும். இது போன்ற இடங்களில் மகசூல் இழப்பு 50 சதம் வரை குறைய வாய்ப்புள்ளது. இக்குறைபாட்டினை போக்கிட பெர்ரஸ் சல்பேட் நுண்சத்து (இரும்புசத்து) இடுவது மிகவும் அவசியமாகும். இதற்கு ஒரு எக்டேருக்கு (21/2 எக்டேருக்கு) பெர்ரஸ் சல்பேட் நுண்சத்து 100 கிலோ இட வேண்டும். 100 கிலோ நுண்சத்து ஊட்ட உரத்தினை பார் அமைத்து கரும்பு கரணைகளை நடவு செய்த பின் தேவையான மணலுடன் கலந்து சீராக இட வேண்டும். இதனால் தரமான எடை நிறைந்த கரும்பு மகசூலாக கிடைக்கிறது. 100 கிலோ பெர்ரஸ் சல்பேட் நுண்ணூட்ட உரத்தின் விலை ரூ.950. இதில் 50 சதத்தொகை அரசு மானியமாக அனுமதிக்கப்படுகிறது. தனியார் உர விற்பனை மையத்தில் நுண்ணூட்ட உரத்தினை ரொக்க விலைக்கு பெற்று, மேற்படி ரொக்க ரசீது பட்டியலுடன் உங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலரை அணுகி முறையான மானிய விண்ணப்பம் பெற்று உரிய ஆவணங்களை வேளாண்மை விரிவாக்க அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அலுவலக கூர்ந்தாய்வு மற்றும் பரிசீலனைக்கு பின்னர் 50 சத அரசு மானியம் விவசாயிகளின் வங்கி கணக்கில் பின்னேற்பு மானியமாக வரவு வைக்கப்படும். இத்திட்டத்தில் ஒரு விவசாயி இரண்டு எக்டேர் வரை மானியம் பெற வழி வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் கரும்பு தோகைகளை உரித்து தீயிட்டு எரித்து அழிக்கும் பழக்கம் பல இடங்களில் உள்ளது. அவ்வாறு செய்யாமல் தோகைகளை நறுக்கி, தூளாக்கி கரும் ஷெல்டர் எனும் கருவி மூலம் தோகைகளை தூள் செய்து அப்படியே நிலத்தில் இட்டு நிலப் போர்வை (மூடாக்கு) அமைக்கலாம். இவ்வாறு நிலப் போர்வை அமைப்பதால் மண்ணில் ஈரம் காக்கப்படுகிறது. பூச்சி,

நோய்தாக்குதல் வெகுவாக குறைகிறது. அங்கக உயிரினங்களின் செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படுகிறது. கரும்பு மகசூல் 25 சதம் வரை கூடுதலாக கிடைக்கிறது. ஒரு எக்டேர் பரப்பில் நிலப்போர்வை மூடாக்கு அமைப்பதற்கு மொத்த செலவினத் தொகையில் 50 சதம் மானியமாக விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். இத்திட்டத்திலும் ஒரு விவசாயி 2 எக்டேர் வரை மானியம் பெற்று பயன் பெறலாம். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## மானாவாரி நிலத்தில் பருத்தி சாகுபடி

பழநி, : மானாவாரி நிலங்களில் பருத்தி விவசாயம் செய்யும் முறை குறித்து வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.பணப்பயிர்களில் பருத்தி முதன்மை இடத்தில் உள்ளது. உலகளவில் பருத்தி உற்பத்தியில் இந்தியா 2ம் இடத்தில் உள்ள போதிலும், பருத்தியின் உற்பத்தில் தமிழகத்தில் பங்கு குறைவாகவே உள்ளது. தமிழகத்தில் உள்ள நூற்பாலைகளுக்கு ஆண்டு ஒன்றிற்கு சுமார் 70 லட்சம் பேல்கள் பஞ்சு தேவைப்படுகின்றன. ஆனால் தமிழகத்தில் அந்தளவிற்கு பருத்தி கிடைப்பதில்லை. இதன் காரணமாக வேளாண்துறையினர் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகள் பல நவீன சாகுபடி முறைகளை அறிமுகப்படுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து பழநி வேளாண்துறை அதிகாரிகள் கூறியதாவது, தமிழகத்தில் குளிர்கால இறவை பருத்தி, மானாவாரி பருத்தி, இறவை பருத்தி, நெல் தரிசுப் பருத்தி என பருத்தி 4 பருவங்களில் பயிரிடப்படுகிறது. மானாவாரி பகுதிகளுக்கு கே 10, கே 11, கே.சி.2, கே.சி.3, எஸ்.பி.பி.ஆர் 3, எஸ்.வி.பி.ஆர் 4, எம்.சி.யு. 5, எம்.சி.யு. 12, பையூர் 1, எல்.ஆர்.ஏ.5166 ஆகிய ரகங்கள் சிறந்தவைகளாக கண்டறிப்பட்டு உள்ளன. விவசாயிகள் கோடை உழவு செய்யும் போது நிலத்தின் சரிவுக்கு குறுக்காக உழவு செய்ய வேண்டும். இதனால் வழிந்தோடி வீணாகும் நீர் தடுக்கப்பட்டு உட்கிரகிக்கப்பட்டு விடும்.

மண்ணின் உற்பத்தி திறனை அதிகரிக்க செய்யும் பொருட்டு தொழுஉரம், மக்கிய குப்பை அல்லது ஆடு,மாடுகள் கிடைபோடுதல் ஆகியவற்றை முறையே செய்ய வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 12.5 டன் தொழுஉரம் இடுவதால், மண்ணின் தன்மை கெட்டு விடாமல் பருத்தியின் விளைச்சலை அதிகமாக பெறலாம். இதனால் மண்ணின் சேமிப்பு திறனும் அதிகரிக்கின்றது. மண் பரிசோதனையின் படி உரம் இடவேண்டும்.

இல்லையெனில் பொதுப் பரிந்துரையின்படி ரகங்களுக்கு தகுந்தவாறு உரம் இடவேண்டும். பரிந்துரை செய்யப்பட்ட தழைச்சத்தில் பாதியையும், முழு அளவு மணிச்சத்தையும் அடியுரமாக இடவேண்டும்.தொடர்ந்து நூண்ணுட்ட கலவையை 12,5 கிலோவை சுமார் 40 கிலோ மணலுடன் கலந்து விதைச்சாலில் தூவ வேண்டும். மண் ஈரம் காக்கும் பொருட்டு மண் போர்வை அமைத்து பயிர் வறட்சியில் வாடுவதை தடுக்கலாம். பருத்தியில் அதிகப்படியான நீராவி போக்கைக் கட்டுப்படுத்த பராபின் என்ற மெழுகு பொருளை 1% என்ற அளவில் இலைகளில் தெளித்து நீராவிப் போக்கை குறைக்கலாம்.

காய்கள் நன்றாக வெடித்து வரும்போது ஒரு வார இடைவெளியில் பருத்தி அறுவடை செய்ய வேண்டாம். காலை 11 மணிக்குள் பருத்தி அறுவடைய முடித்துவிட வேண்டும். நன்கு வெடித்த பருத்தியை குவியலாகவும், பூச்சிகளினால் சேதமடைந்த பருத்தியை தனிக்குவியலாகவும் வைக்க வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் வேளாண் அலுவலகத்தை அணுகலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## நவீன முறையில் ஆடு வளர்ப்பு

வத்தலக்குண்டு, : வத்தலக்குண்டு அருகே விராலிபட்டியில் நவீன முறை ஆடுகள் வளர்ப்பு, விவசாயிகளை பெரிதும் கவர்ந்து வருகிறது.வத்தலக்குண்டு அருகே விராலிப்பட்டியில் விவசாயி ஒருவர்

நவீன முறையில் ஆடுகளை வளர்த்து வருகிறார். ஆடுகளை வளர்ப்பதற்கென தனியாக கூடாரம் அமைத்துள்ளார். ஆடுகளுக்கு போடப்படும் இரை வீணாகாத வகையிலும், அவை எளிதில் உண்ணும் வகையில் அரைவட்ட வடிவிலான தட்டை பொருத்தியுள்ளார்.

இதனால் கொட்டகையின் உள்பகுதி சுத்தமாக உள்ளது. மேலும் சுத்தமான காற்று உள்ளே வரும் வகையில் அமைக்கப்பட்டு உள்ளது. சுகாதாரமான சூழலில் இங்கு ஆடுகள் வளர்க்கப்படுவதால் பிற இடங்களில் வளரும் ஆடுகளை விட அவை ஆேராக்கியமாகவும், வேகமாகவும் வளருவதாக கூறப்படுகிறது. இந்த முறை ஆடுகள் வளர்ப்பு அப்பகுதி விவசாயிகளை பெரிதும் கவர்ந்துள்ளது.

## விவசாயிகளுக்கு வேளாண் பயிற்சி

முதுகுளத்தூர், :முதுகுளத்தூர் அருகே மேலக்கன்னிசேரி கிராம விவசாயிகளுக்குச் சொட்டு நீர் பாசன முறையில் விவசாயம் செய்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் திட்ட இயக்குநர் உதுமான் முகைதீன் தலைமை தாங்கினார். வேளாண் உதவி பொறியாளர் சிவக்குமார், விதை விற்பனையாளர் தமிழ்குமார், வேளாண் உதவித் திட்ட இயக்குநர் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் வயல்களின் அமைப்பு குறித்தும், சொட்டுநீர்ப் பாசன வசதி முறை குறித்தும் விவ சாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் அப்பகுதியில் உள்ள 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஐயப்பன், ஜெயகண்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

## திருப்புவனத்தில் கறவை மாடு வளர்ப்பு பயிற்சி கூட்டம்

திருப்புவனம், : திருப்புவனம் கால்நடை மருந்தகத்தில் அம்மா திட்டத்தின் கீழ் விஞ்ஞான முறைப்படி கறவை மாடு வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது. முகாமில் கால்நடை மருத்துவர் ரவிக்குமார்

கறவை மாடுகள் தேர்வு, தீவனமுறை, பசுந்தீவனத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கி பேசினார். கால்நடை மருத்துவர் சங்கமேஸ்வரன் மதிப்பு கூட்டிய பால்பொருட்களின் மகத்துவம், வருடம் ஒரு கன்று எடுக்கும் முறை பற்றி விளக்கினார். கால்வளர்ப்பு குறித்த விவசாயிகளின் கேள்விகளுக்கு உரிய பதில் அளிக்கப்பட்டது. கால்நடைகளுக்கு தேவையான தாது உப்புகள் வழங்கப்பட்டன. முகாமிற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி, உதவி தொழில்நுட்ப மேலாளர் நந்தினி ஆகியோர் செய்திருந்தனர்.

## நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் பிப். 15 முதல் செயல்படும்

தூத்துக்குடி, : தூத்துக்குடி கலெக்டர் ரவிகுமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 8 வட்டங்களில், 12 ஆயிரத்து 436 ஹெக்டேர் பரப்பளவில் பிசான நெல் சாகுபடியாகியுள்ளது. நெல் அறுவடைப் பணிகள் பிப். 3ஆம் வாரத்தில் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து, விவசாயிகள் சாகுபடி செய்த நெல்லுக்கு உரிய விலை கிடைக்க ஏதுவாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் தூத்துக்குடி மாவட்டத்தில் 20 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பிப். 15ம் தேதி முதல் தூத்துக்குடி வட்டத்தில் குலையன்கரிசல் கிராமத்திலும், ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் ஸ்ரீவைகுண்டம், வல்லநாடு, கருங்குளம், ஏரல் ஆகிய பகுதிகளிலும், திருச்செந்தூர் வட்டத்தில் குரும்பூர், நாசரேத், ஆழ்வார்திருநகரி பகுதிகளிலும், கோவில்பட்டி வட்டத்தில் கோவில்பட்டி, கயத்தாறு ஆகிய பகுதிகளிலும் நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படத் தொடங்கும்.

இதைத்தொடர்ந்து, பிப். 20ம் தேதி முதல் ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் பெருங்குளம், பழையகாயல், இருவப்பபுரம், வசவப்பபுரம் ஆகிய பகுதிகளிலும், திருச்செந்தூர் வட்டத்தில் சோனகன்விளை, ஆத்தூர் பகுதிகளிலும், சாத்தான்குளம் வட்டத்தில் சாத்தான்குளம், பேய்க்குளம்

பகுதிகளிலும், ஒட்டப்பிடாரம் வட்டக்தில் பசுவந்தனையிலும், எட்டயபுரம் வட்டத்தில் எட்டயபுரத்திலும் நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படத் தொடங்கும்.அரசு உத்தரவுப்படி 1.10.2015 முதல் 30.9.2016 வரை சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1,520க்கும் மற்றும் சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1,460க்கும் கொள்முதல் செய்யப்படும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தருவைகுளத்தில் மீன் வரத்து குறைந்தது

குளத்தூர்,: தருவைகுளத்தில் நாட்டுப்படகு 200, விசைப்படகு 130 என இரண்டாயிரத்துக்கும் அதிகமான மீன்பிடித்தொழிலாளர்கள் தினமும் கடலுக்கு சென்று ஒருநாள்மீன்பிடிதொழில் மற்றும் தங்கல்(ஒருவாரம்)மீன்பிடிதொழில் செய்து. கிடைக்கின்ற மீன்களை ஏலக்கூடத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு பெய்த தொடர் மழையினால் கடலில் நீரோட்டம் அதிகமாக இருந்ததால் மீன்பாடுகள் கடந்த சில மாதங்களாக வழக்கத்தை விட குறைந்தது. இதனால் மீன்பிடித்தொழிலாளர்கள் மீன்பாடுகள் இன்றி ஏமாற்றம் அடைந்துவந்தனர்.

இந்நிலையில் கடந்த வாரம் தருவைகுளம் தூயநிக்கோலசியர் ஆலய திருவிழாவினால் கடலுக்குச்செல்லாமல் இருந்தனர். இதனால் ஏலக்கூடத்திற்கு மீன்கள் வரத்து முற்றிலும் குறைந்து ஏதோ ஒன்றிரண்டு தொழிலாளர்கள் தங்கள் வலையில் கிடைத்த மீன்களை கொண்டுவந்து வியாபாரம் செய்தனர். இதில் திருக்கை, குரங்குமீன், சென்நகரை, விலாமீன், ஊரா, மஞ்சைகீளி, சுரலை, நகர, கிளிமீன், மனலை போன்ற மீன்கள் மற்றும் பார் நண்டுகள் என குறைந்தளவு மீன்கள் ஏலக்கூடத்தில் காணப்பட்டது.

சென்நகரை, விலாமீன், மஞ்சைகீளி போன்ற மீன்கள் அதிகமாக வருவதாகவும் இதன் விலைகள் கடந்த வாரத்தில் கிலோ ரூ.70, ரூ.80க்கு விற்ற மீன்கள் தற்போது கிலோவுக்கு ரூ.30 கூடுதலாக உள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நெகமம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 50 டன் கொப்பரை தேங்காய்களை இருப்பு வைத்துள்ள விவசாயிகள்




நெகமம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 50 டன் கொப்பரை தேங்காய்களை விவசாயிகள் இருப்பு வைத்துள்ளனர்.

<u>விவசாயம்</u>

நெகமம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான ராமச்சந்திராபுரம், சின்னநெகமம், அய்யம்பாளையம், உதவிபாளையம், மூலனூர், ஜோத்தம்பட்டி, ஆவலப்பம்பட்டி, கருமாபுரம் உள்பட பல்வேறு இடங்களில் தென்னை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இங்கு தேங்காய் பறிக்கப்பட்டு, அதனை உடைத்து உலர்களங்களில் காயப்போட்டு கொப்பரை தேங்காய்களாக மாற்றப்படுகிறது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் கொப்பரை தேங்காய்களை விவசாயிகள் நெகமம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விற்பனை செய்து வந்தனர். மேலும் காங்கயம், வெள்ளக்கோவில் பகுதியில் வெளிமார்க்கெட்டிலும் விற்று வந்தனர்.

<u>ஏலம் ரத்து</u>

கடந்த சில மாதங்களுக்கு முன்பு கொப்பரை தேங்காய் ஒரு கிலோவுக்கு ரூ.90 வரை விலை கிடைத்து வந்தது. இதனிடையே இந்த விலை படிப்படியாக குறைந்து தற்போது ஒரு கிலோ கொப்பரை தேங்காய் விலை ரூ.50 முதல் ரூ.55 வரை விற்பனையாகிறது. இந்த விலை வீழ்ச்சியினால் கொப்பரை தேங்காய்களை விவசாயிகள் விற்காமல், விலை உயரும் என்ற நம்பிக்கையில் இருப்பு வைத்து வருகிறார்கள்.

ஒரு சில விவசாயிகள் நெகமம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் இருப்பு வைத்துள்ளனர். இதன் மூலம் பொருளீட்டு கடனும் வழங்கப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்று வந்தது. தற்போது விலை வீழ்ச்சியால் கொப்பரை தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருவது இல்லை. இதனால் கடந்த 6 மாதங்களாக நெகமம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கொப்பரை தேங்காய் ஏலம் ரத்து செய்யப்பட்டு வருகிறது.

<u>50 டன்</u>

இது குறித்து விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சரவணன் கூறியதாவது:–

நெகமம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு விலை வீழ்ச்சி காரணமாக கடந்த 6 மாதங்களாக ஏலம் நடைபெறவில்லை. அதே நேரத்தில் விலை உயரும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் கொப்பரை தேங்காய்களை இருப்பு வைத்துள்ளனர். 1000 மூட்டைகளில் தலா 50 கிலோ வீதம் மொத்தம் 50 டன் கொப்பரை தேங்காய் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஆண்டிற்கு 500 டன் வெண்பட்டுக்கூடு உற்பத்தி அதிகாரி தகவல்



திண்டுக்கல் மாவட்டத்தில் ஆண்டிற்கு சுமார் 500 டன் வெண்பட்டுக்கூடு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது என்று பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர்கூறினார்.

பட்டுஉற்பத்தி

உலகில், தங்கத்திற்கு அடுத்து மதிப்புமிக்கதாக பட்டு இருக்கிறது. வெண்பட்டு, மஞ்சள் பட்டு என 2 ரகங்களில் பட்டு கிடைக்கிறது. தற்போது ஊதா நிறத்தில் பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. இதுதவிர பல வண்ணங்களில் உற்பத்தி செய்ய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் உலகளவில் பட்டு உற்பத்தியில் சீனா முதல் இடத்திலும், இந்தியா 2-வது இடத்திலும் இருக்கிறது. உலகத்தரம் வாய்ந்த பட்டு இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுவதாகவும், அதற்கு சந்தை மதிப்பு

நன்றாக உள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, குஜராத் போன்ற பல மாநிலங்களில் பட்டு உற்பத்தி சிறப்பாக நடைபெற்று வருவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

5ஆண்டுகளாக...

டெல்லியில் உள்ள மத்திய பட்டு வாரியம், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பட்டுகளின் ரகம், தரம் ஆகியவற்றை நிர்ணயம் செய்கிறது. அந்த வகையில் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெண்பட்டு தரத்தில் தொடர்ந்து 5 ஆண்டுகளாக முதலிடத்தில் உள்ளதாக மத்திய பட்டு வாரியம் தகவல் தெரிவிக்கிறது. இதற்கு முக்கிய காரணமாக இருப்பது திண்டுக்கல் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் வெண்பட்டுக்கூடு தான் என்பது பலருக்கு தெரியாது.

இதுகுறித்து மாவட்ட பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் ரமேஷ் கூறியதாவது:-

திண்டுக்கல் மாவட்டத்தில், சாணார்பட்டி, பழனி நரிக்கல்பட்டி, வத்தலக்குண்டு கணவாய்பட்டி ஆகிய ஊர்களில் பட்டு இளம்புழு வளர்ப்பு மையம் செயல்பட்டு வருகிறது. வெண்பட்டுக்கூடு உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பட்டு புழு வளர்ப்பு மனை அமைத்தல், புழு வளர்ப்பு தொழில்நுட்பம், மல்பெரி (முசுக்கொட்டை) இலை சாகுபடி குறித்த விவரங்கள் அனைத்தும் தெரிவிக்கப்படுவதுடன், பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

500டன்உற்பத்தி

மாவட்டத்தில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இத்தொழிலில் 1,400 விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பழனி, சாணார்பட்டி உள்பட பல்வேறு பகுதிகளில் வெண்பட்டுக்கூடு உற்பத்தி பெருமளவில் நடக்கிறது. பட்டுப்புழு வளர்ப்பு லாபகரமான

தொழிலாக இருப்பதால் விவசாயிகள் ஆர்வத்துடன் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதுதவிர பட்டுபுழு வளர்ப்பிற்கு மாவட்டத்தின் தட்பவெப்பநிலையும் சாதகமாக இருக்கிறது. இதையொட்டி வெண்பட்டுக்கூடு உற்பத்தி தொழில் வளர்ச்சியடைந்து வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் ஆண்டிற்கு 500 டன் அளவில் வெண்பட்டுக்கூடு உற்பத்தி செய்யப்படுகிறது. அவை கிலோ ரூ.2,400 முதல் ரூ.2,500 வரை விற்பனை ஆகிறது. ஆண்டிற்கு 10 மாதங்கள் வரை இதே விலை நிலவரத்தில் கொள்முதல் நடக்கிறது. சேலம், தர்மபுரி, சிவகங்கை, புதுக்கோட்டை, பெங்களூருவில் உள்ள பட்டுக்கூடு அங்காடிகளில் பட்டுக்கூடுகள் விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தேங்காய் பருப்பு விலை உயர்வு



பரமத்தி வேலூரில் தேங்காய் பருப்பு விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

தேங்காய்பருப்பு

பரமத்தி வேலூர் தாலுகாவில் கபிலர்மலை, பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், பாலப்பட்டி, மோகனூர், சோழசிராமணி, ஜேடர்பாளையம், அய்யம்பாளையம், பிலிக்கல்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை பயிர் செய்யப்பட்டு உள்ளது. இங்கு விளையும் தேங்காய்களை உடைத்து அதன் பருப்புகளை சிறு வியாபாரிகள் வியாழக்கிழமை தோறும் பரமத்தி வேலூர் வெங்கமேட்டில் உள்ள சேலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு கொண்டு வரப்பட்டு தரத்திற்கு தகுந்தார்போல் மறைமுக ஏலம் விடப்படுகிறது.

விலைஉயர்வு

கடந்த வாரம் நடைபெற்ற தேங்காய் பருப்பு ஏலத்தில் 648 கிலோ தேங்காய் பருப்பு ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் அதிகபட்சமாக கிலோ ஒன்று 51 ரூபாய் 60 பைசாவிற்கும், குறைந்த பட்சமாக 49 ரூபாய் 60 பைசாவிற்கும், சராசரியாக 50 ரூபாய் 60 பைசாவிற்கும் ஏலம் போனது. இந்த நிலையில் நேற்று நடைபெற்ற தேங்காய் பருப்பு ஏலத்தில் 825 கிலோ தேங்காய் பருப்புகள் கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் அதிகபட்சமாக கிலோ ஒன்று 52 ரூபாய் 90 பைசாவிற்கும், குறைந்தபட்சமாக 50 ரூபாய் 89 பைசாவுக்கும், சராசரியாக 51 ரூபாய் 90 பைசாவிற்கும் ஏலம் போனது. இந்த வாரம் தேங்காய் பருப்பின் வரத்தும் அதிகரித்ததோடு, விலையும் சற்று உயர்வு அடைந்து இருந்ததால் தேங்காய் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

தேங்காய்

இதேபோல வெங்கமேடு சேலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உரிக்காத தேங்காய்களும் ஏலம் விடப்பட்டு வருகிறது. தேங்காய் வரத்து

இல்லாததன் காரணமாக கடந்த 2 வாரங்களாக ஏலம் நடைபெறவில்லை. இந்நிலையில் நேற்று மீண்டும் தேங்காய்கள் மறைமுக ஏலம் நடைபெற்றது.

இந்த ஏலத்திற்கு பரமத்தி வேலூர் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 1,270 தேங்காய்களை ஏலம் விடுவதற்காக கொண்டு வந்திருந்தனர். இந்த தேங்காய்கள் அனைத்தும் ரூ.5-க்கு ஏலம் போனது. பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் இந்த தேங்காய்களை ஆர்வமுடன் ஏலம் எடுத்துச் சென்றனர்.

## வெம்பக்கோட்டை அணையை ரூ.2½ கோடியில் புனரமைக்கும் பணி அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தொடங்கி வைத்தார்



வெம்பக்கோட்டை அணையை ரூ.2 கோடியே 40 லட்சம் மதிப்பில் புனரமைக்கும் பணியினை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தொடங்கி வைத்தார்.

நிதிஒதுக்கீடு

வெம்பக்கோட்டையில் 1986-ம் ஆண்டு எம்.ஜி.ஆர் ஆட்சியில் அணை கட்டப்பட்டது. இந்த அணையை புனரமைப்பதற்காக அரசு ரூ.2 கோடியே 40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து உள்ளது. இதற்கான பூமி பூஜை விழா வருவாய்த் துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில்நடைபெற்றது.

வெம்பகோட்டை யூனியன் தலைவர் ரேவதி காசி துரைபாண்டியன் தலைமை தாங்கினார். மேற்கு ஒன்றிய செயலாளர் ராமராஜ் முன்னிலை வகித்தார். தொகுதி செயலாளர் சீனிவாசன் வரவேற்றார். மாவட்ட கவுன்சிலர் சுசிலாராஜ், துணைத் தலைவர் முத்துராஜ், ஊராட்சி மன்ற கூட்டமைப்பு தலைவர் பார்த்தசாரதி, முன்னாள் தொகுதி செயலாளர் சேதுராமனுஜம், சாத்தூர் நகர செயலாளர் வாசன் உள்பட கவுன்சிலர்கள் கலந்துகொண்டனர்.

புனரமைப்புப் பணிகளை தொடங்கி வைத்து அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேசியதாவது:- எம்.ஜி.ஆரால் 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட வெம்பக்கோட்டை அணை நமது முதல்வரால் மறு சீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்பது ஆண்டவன் எழுதிய கட்டளை. வெம்பகோட்டை அணை வெம்பக்கோட்டை கிராமத்தில் வைப்பாற்றின் குறுக்கே அமைந்துள்ளது. இந்த அணையின் மூலம் வெம்பக்கோட்டை, பனையடிபட்டி, சூரார்பட்டி, பந்துவார்பட்டி, சூரன்குடி, ஒத்தையால், கோட்டைப்பச்சேரி, மேட்டுப்பட்டி, விஜயகரிசல்குளம் ஆகிய கிராமங்கள் பயனடைகின்றன.

புனரமைப்புப்பணிகள்

அணைகள் புரனமைப்பு மற்றும் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அணை கரையை பலப்படுத்தும் பணிகள், கரையின் இருபுறமும் கைப்பிடிசுவர் அமைக்கும் பணி, கரையின் வெளிப்புறத்தில் மழை நீர் வாய்க்கால் அமைக்கும் பணி,

கரையின் மேற்புறம் சாலை அமைக்கும் பணி, கரையின் உள்புறம் ரிவெட்மெண்ட் கற்கள் சீரமைக்கும் பணி, உபரிநீர் போக்கில் உள்ள ஷட்டர்களை சீரமைக்கும் பணி, கரையின் வெளிப்புறம் புல் தரை அமைக்கும் பணி, அலுவலக அறை மற்றும் கிட்டங்கிகளை சீரமைக்கும் பணி, நீர் அளவு கம்பம் அமைக்கும் பணி, அணை ஷட்டர்களுக்கு வர்ணம் பூசும் பணி, அலாரம் மற்றும் பேட்டரி சார்ஜர் அமைக்கும் பணி, அணையில் மின் சாதனங்கள் புனரமைக்கும் பணி ஆகிய பணிகள் 2 கோடியே 40 லட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ளன.

திட்டங்கள்

மேற்கண்ட பணிகளை நிறைவேற்றி அணையில் முழு கொள்ளளவு நீரை சேமித்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். சிறு வியாபாரிகளுக்கு வட்டியில்லா கடன்களை வழங்கி அவர்களின் வாழ்க்கையில் முதல்-அமைச்சர் ஒளியேற்றி வைத்துள்ளார். சாத்தூர் சட்டமன்ற தொகுதியில் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றிட நிதியினை வாரி வழங்கியுள்ளார்.

இதன் மூலம் முதல்வரின் கருணையை பெற்ற தொகுதி என்ற சிறப்பை பெற்றுள்ளது. குறிப்பாக, வெம்பக்கோட்டையை தனி தாலுகாவாக மாற்றியுள்ளர்ர். 9 புதிய கோட்டங்களை உருவாக்கி வருவாய் துறையில் மறுமலர்ச்சியை உருவாக்கி உள்ளார். இவ்வாறு அவர் பேசினார். சாத்தூர் யூனியன் தலைவர் வேலாயுதம் நன்றி கூறினார்.